# ஸ்ரீ ஸந்நிதி செய்திகள்

*20.07.25 - ஆடி 4ந்தேதி ஞாயிற்றுக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

*இன்று ஸ்வாதி. வழக்கம் போல் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் திருவாராதனங்களை செய்தருளி யாவருக்கும் ஸ்ரீஶடாரி ஸாதித்தாயிற்று. ப்ரார்த்தித்தவர்களுக்கு ஸமாஶ்ரயணம், பரந்யாஸாதிகளையும் அனுக்ரஹித்தாயிற்று. இஜ்யாராதனத்தில் ஸ்ரீ மாலோலன் திருவாராதனம் கண்டருளினான். ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலனுக்கு திருமஞ்சனம் செய்து ஸாத்தியாயிற்று. நிறைய ஸேவார்த்திகள் ஸேவித்து களித்தனர்.*

*21.07.25 - ஆடி 5ந்தேதி திங்கட்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

*இன்று ஸர்வ ஏகாதசி. வழக்கம் போல் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் திருவாராதனங்களை செய்தருளி யாவருக்கும் ஸ்ரீஶடாரி ஸாதித்தாயிற்று. ஸமாஶ்ரயணம்அனுக்ரஹித்தாயிற்று. அச்சித்ரம் பாராயணத்தை ஸ்ரீ மாலோலன் செவி சாற்றினான். ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ ஸந்நிதி வாசலில் ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னாரை பல்லக்கில் மங்களாஶாஸனம் பண்ணியாயிற்று. இரவு வாகனத்தில் ஸேவை. ஸ்ரீமதழகியசிங்கர் கண்குளிர ஸேவித்தாயிற்று.*

*22.07.25 - ஆடி 6ந்தேதி செவ்வாய்க்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

*இன்று அல்ப துவாதசி. ஸ்ரீமதழகியசிங்கர் சீக்ரமாகவே எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் திருவாராதனங்களையும் பூர்வர்கள் பாதுகாராதனத்தையும் பண்ணியருளியாயிற்று. பாரணையும் ஸகாலத்தில் நடைபெற்றது.*

*ப்ரதோஷ வேளையில் ஸ்ரீமாலோலன் திருவாராதனம் கண்டருளினான். ஸ்ரீமத் அழகியசிங்கர் எழுந்தருளி மஹா ஹாரத்தியும் நித்யபடி ஹாரத்திகளையும் ஸமர்ப்பித்தாயிற்று. திரளாக ஸேவார்த்திகள் கோஷ்டியில் ஸ்ரீமாலோலனையும், ஸ்ரீமத் அழகியசிங்கரையும் ஸேவித்து களித்தனர். ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் இரண்டாம் நாள் உத்ஸவம். ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸேவித்தாயிற்று.*

*23.07.25 - ஆடி 7ந்தேதி புதன்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

*வழக்கம் போல் எல்லாம் நடந்தன. ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் திருவாடிப்பூர 3ம் உத்ஸவம். காலை பல்லக்கு. மாலை வாகனம். ஸ்ரீமதழகியசிங்கர் 2 வேளையும் வாசலில் ஏள்ளி மங்களாஶாஸனம் செய்து களித்தாயிற்று. எல்லோரிடமும் இங்கு ஸங்கல்பம் செய்யாது போனால் திருவாடிப்பூர உத்ஸவம் ஸேவிக்க முடியுமா என்று ஸாதித்தாயிற்று.*

*24.07.25 - ஆடி 8ந்தேதி வியாழக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

*வழக்கம் போல் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் திருவாராதனங்களை செய்தருளி யாவருக்கும் ஸ்ரீஶடாரி ஸாதித்தாயிற்று. நம் ஸந்நிதி வாசலில் ஐந்து கருட ஸேவை. ஐந்து திவ்ய தேசங்களிலிருந்து பெருமாள் எழுந்தருளுவார். முதலில் பெரியாழ்வார் எழுந்தருளி ஐந்து திவ்ய தேச பெருமான்களை பூர்ணகும்பம் தாம்பூலத்துடன் வரவேற்றாகும். முதலில் பெரிய பெருமாள் எழுந்தருளினார். பின்னர் ஸ்ரீநிவாஸ பெருமாள், அதன் பின் ஸுந்தர்ராஜ பெருமாள், தொடர்ந்து ரெங்கமன்னார் மற்றும் ஸ்ரீ ஆண்டாள். இது அனைத்துக்கும் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி மங்களாஶாஸனம் கண்டருளினார். கண்களில் கண்ணீர்சோர ஆனந்தபூர்ணராய் ஸேவித்தாயிற்று.*

*25.07.25 - ஆடி 9ந்தேதி வெள்ளிக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

காலை ஐந்து கருட ஸேவை திரும்புகாலில் நம் ஸ்ரீ ஸந்நிதி வாசலில் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் மங்களாஶாஸனம் செய்தாயிற்று.

*26.07.25 - ஆடி 10ந்தேதி சனிக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் திருவாராதனங்களை செய்தருளி யாவருக்கும் ஸ்ரீஶடாரி ஸாதித்தாயிற்று. ஸமாஶ்ரயணம், பரந்யாஸமும் நடைபெற்றது.

இரவு ஸ்ரீமதழகியசிங்கர் க்ருஷ்ணன் கோவில் ஆண்டாள் ரங்கமன்னார் ப்ரஹ்மோத்ஸவம் ஏழாம் திருநாள் உத்ஸவத்திற்கு எழுந்தருளியாயிற்று. உலகெங்கிலும் காணக்கிடைக்காத வருடத்திற்கு ஒருமுறை மட்டும் ஸ்ரீஆண்டாள் மடியில் ஸ்ரீரெங்கமன்னார் திவ்யஶயன திருக்கோலத்தை சிஷ்யர்களுடன் கண்டு மகிழ்ந்து மங்களாஶாஸனம் செய்தாயிற்று.

*27.07.25 - ஆடி 11ந்தேதி ஞாயிற்றுக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலன் திருவாராதனங்களை பண்ணியபின் யாவருக்கும் ஸ்ரீஶடாரி ஸாதித்தாயிற்று. பின்னர் ஸ்ரீ உ.வே. வில்லூர் கருணாகராச்சார் ஸ்வாமி ப்ரார்த்தித்தபடி ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸந்நிதி எழுந்தருளி ஆண்டாள் அம்மாளாசார்யன் அம்மாள் ஸ்ரீபாஷ்ய வித்வத் ஸதஸுக்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அநுக்ரஹித்தாயிற்று. ஸ்ரீமதழகியசிங்கர் அத்யக்ஷத்தில் ஸதஸ் நடைபெற்றது. பின்னர் வில்லூர் கருணாகராச்சார் ஸ்வாமி ஸ்ரீமதழகியசிங்கருக்கு விசேஷ ஸம்பாவனை ஸமர்ப்பித்து அனுக்ரஹம் பெற்றுக்கொண்டார்.

*28.07.25 - ஆடி 12ந்தேதி திங்கட்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலனின் திருவாராதனங்கள் யதாக்ரமம் நடைபெற்றது. பின் நம் ஸந்நிதி வாசலில் பின்புறம் தெற்கு ரத வீதியில் திருத்தேர் மங்களாஶாஸனம் பண்ணியாயிற்று. திருத்தேர் நம் ஸந்நிதி தாண்டி எழுந்தருளும் வரை ஸ்ரீமதழகியசிங்கர் அங்கு ஏள்ளியிருந்து சிஷ்யர்கள் மற்றும் கைங்கர்யபரர்களுடன் ஸ்ரீகோதை நாச்சியாரைக் கண்டு களித்தார் தேரை ஸேவிக்கும்போது ஆனந்தபாஷ்பம் பெருக ஸேவித்தாயிற்று.

*29.07.25 - ஆடி 13ந்தேதி செவ்வாய்க்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீ மாலோலனின் திருவாராதனங்கள் யதாக்ரமம் நடைபெற்றது. பின்னர் காலை, மாலை இரண்டு வேளையும் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீஆண்டாள் ரங்கமன்னாரை பல்லாக்கில் நம் ஸ்ரீஸந்நிதி வாசலில் ஸேவித்தாயிற்று.

*30.07.25 - ஆடி 14ந்தேதி புதன்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

ஸ்ரீ ஆண்டாள் திருவாடிப்பூரம் உத்ஸவம் பூர்த்தி. இவ்வருடம் இங்கு சாதுர்மாஸ்யம் அநுஷ்டித்ததின் பலன் ஸ்ரீ ஆண்டாள் திருவாடிப்பூரம் உத்ஸவத்தை மிகவும் அத்யத்புதமாக ஸேவித்து, பூர்ண மர்யாதைகளுடன் கிடைக்கப்பெற்றது பற்றி எல்லோரிடமும் உபாதித்து எல்லோருக்கும் இந்த அனுக்ரஹம் கிடைக்கும்படியாக அனுக்ரஹித்தாயிற்று.

*01.08.25 - ஆடி 16ந்தேதி வெள்ளிக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

இன்று ஸ்வாதி. ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீமாலோலன் திருவாராதனங்களை செய்தருளியாயிற்று. வழக்கம்போல் ஸமாஶ்ரயணம், பரந்யாஸம் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீமதழகியசிங்கர் ஆஸ்ரமத்துக்கு எழுந்தருளியாயிற்று. மாத்யாஹ்நிகம் அநுஷ்டானத்தை

முடித்துக்கொண்டு ஸ்ரீமாலோலன் ஸ்வாதி திருமஞ்சனத்திற்கு எழுந்தருளியாயிற்று. கைங்கர்யபரர்கள், மற்றும் நிறைய ஸேவார்த்திகள் ஸ்ரீமாலோலன் திருமஞ்சனத்தை கண்டு களித்தார்கள். சுமார் இரண்டு மணி அளவில் ததீயாராதனை கோஷ்டி நடைபெற்றது.

சுமார் 3 மணி அளவில் ஸ்ரீமான் TVS வேணுஸ்ரீநிவாஸன் ஸ்வாமி நேரில் வந்து ஸ்ரீமாலோலன் மற்றும் ஸ்ரீமதழகியசிங்கரையும் சாதுர்மாஸ்யதில் ஸேவித்து அனுக்ரஹம் பெற்றுக்கொண்டார். சுமார் 1 மணி நேரத்துக்குமேல் ஸ்ரீமதழகியசிங்கருடன் ஏகாந்தத்தில் வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு தாம்பூலகோஷ்டி நடைபெற்றது. ஸ்ரீமதழகியசிங்கர் யாவருக்கும் அக்ஷதை அனுக்ரஹித்தாயிற்று.

*08.08.25 - ஆடி 23ந்தேதி வெள்ளிக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

வழக்கம்போல் ஸ்ரீமத் அழகியசிங்கர் எழுந்தருளி அபிகமனாராதனங்களாயிற்று. ஆஸ்தானத்தில் டோலை உத்ஸவம் நடைபெற்றது. இந்த சாதுர்மாஸ்யத்தில் இவ்வருடம் இதுதான் இரண்டாவது டோலை உத்ஸவம். வழக்கமாக ஸங்கல்பத்தில் அன்று மாலை ஸ்ரீஸந்நிதி கைங்கர்யபரர்கள் டோலை உத்ஸவம் நடைபெறும். அதன்பிறகு இன்று ஸ்ரீமான் ஸ்ரீதர் ஸ்வாமி, மற்றும் ஸ்ரீமான் வடபத்ரசாயி, கோவை, நம் ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவம் செய்துவைத்து கண்டு களித்தார்கள். ஸேவார்த்திகள் திரளாக வந்திருந்து அனுக்ரஹம் பெற்றார்கள்.

*09.08.25 - ஆடி 24ந்தேதி சனிக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

இன்று 44ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் வார்ஷிகாராதன பாராயணம் தொடக்கம் நடைபெற்றது. சுமார் ஐம்பது வித்வான்கள் பாராயணத்துக்கு எழுந்தருளியிருந்தார்கள். இரண்டு வேளையும் பாராயண சாற்றுமறை யதாக்ரமம் நடந்தது. இன்று உபாகர்மா. வழக்கம்போல் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீமாலோலன் அபிகமன ஆராதனம் நடந்தது. பின்னர் ஸ்ரீஸந்நிதி கைங்கர்யபரர்கள் ஸ்ரீமதழகியசிங்கர் அனுக்ரஹத்துடன் ஸங்கல்பம் செய்துகொண்டு உபாகர்மா யஜ்ஞோபவீதம் போட்டுக்கொண்டு தர்ப்பித்தார்கள். பின்னர் இஜ்ய ஆராதனம் முடிந்த பிறகு அத்யயன ஹோமம் ஸ்ரீமதழகியசிங்கர் அத்யக்ஷத்தில் கைங்கர்யபரர்களுடன் நடைபெற்றது. ஸ்ரீகார்யம் ஸ்வாமி வேதாரம்பம் செய்து வைத்தார். பின்னர் சிஷ்யர்கள் மற்றும் அபிமானிகள் ததீயாராதனத்தில் அன்வயித்தார்கள். தாம்பூலகோஷ்டி நடைபெற்று ஸ்ரீமதழகியசிங்கர் யாவரையும் அனுக்ரஹித்தாயிற்று.

*10.08.25 - ஆடி 25ந்தேதி ஞாயிற்றுக்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

இன்று 44ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் வார்ஷிகாராதன பாராயணம் இரண்டாம் நாள். காயத்ரீ ஜபம். ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீமாலோலன் திருவாராதனங்கள் பண்ணியருளியாயிற்று. அபிகமன ஆராதனத்திற்கு பிறகு ஸ்ரீஸந்நிதி கைங்கர்யபரர்கள் யாவரும் காயத்ரீ ஜபம் செய்து ஸ்ரீமதழகியசிங்கரை ஸேவித்து அனுக்ரஹம் பெற்றுக்கொண்டார்கள். ததீயாராதனம் நடைபெற்று தாம்பூலகோஷ்டி ஆனவுடன் ஸேவார்த்திகள் ஸ்ரீமதழகியசிங்கரை ஸேவித்து அனுக்ரஹம் பெற்றார்கள். இரண்டு வேளைகளிலும் பாராயணம், சாற்றுமறைகள் நடந்தது.

*11.08.25 - ஆடி 26ந்தேதி திங்கட்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

இன்று 44ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் வார்ஷிகாராதனம் (க்ருஷ்ண த்ருதீயை). ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி ஸ்ரீமாலோலன் திருவாராதனங்களை பண்ணியருளியாயிற்று. பெரிய சாற்றுமுறை நடைபெற்றது. பின்னர் ஸ்ரீமதழகியசிங்கர் தீர்த்தம் ஸ்ரீஶடாரி ஸாதித்தாயிற்று. பிறகு முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் பாதுகாதீர்த்தமும் யாவருக்கும் ஸாதித்தாயிற்று. தொடர்ந்து முக்கூர்

ஸ்ரீமதழகியசிங்கருடைய ஆராதனம் நடைபெற்றது. மாலை ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளி பானகாராதனம் பூர்த்தியாக செய்தாயிற்று.

*12.08.25 - ஆடி 27ந்தேதி செவ்வாய்க்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

யதாக்ரமம் அபிகமனாதிகள் நடந்தது. ஸேவார்த்திகள் நிறைய வந்து அழகியசிங்கர், மாலோலன், ஆண்டாள் ரங்கமன்னாரை ஸேவித்துவிட்டு போகிறார்கள்.

*13.08.25 - ஆடி 28ந்தேதி புதன்கிழமை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

யதாக்ரமம் எல்லாம் நடைபெற்றது.

*14.08.25 முதல் 16.08.25 வரை - ஆடி 29ந்தேதி முதல் 31ந் தேதி வரை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை - ஸ்ரீவில்லிபுத்தூர்*

வழக்கம்போல் அபிகனாதிகள் நடைபெற்றது. அழகியசிங்கர் அப்போதப்போதுகளில் ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னாரை ஸேவித்தாகிறது. ப்ரதிதினமும் கோவில் கைங்கர்யபரர்கள் ஸ்ரீமதழகியசிங்கரிடம் கோவில் பற்றிய விசேஷங்களைப்பற்றி பவ்யமாக விஜ்ஞாபித்து அழகியசிங்கரின் அனுக்ரஹம்தான் என்கிறார்கள். ஸ்ரீமதழகியசிங்கர் நம் பூர்வாசார்யர்கள் இதேபோல் ஸ்ரீஸந்நிதிக்கு மடங்களை திவ்யதேஶங்களில் நிர்மாணித்து திவ்யதேஶ எம்பெருமான்களை மங்களாஶாஸநம் செய்வதுக்கென்று நல்ல மனதுடன் ஏற்பாடு செய்திருப்பதை ஸாதித்தாயிற்று.